**Starting time 11.19 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 36/2003**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 25.03.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : அங்கமுத்து | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling: | | Age | : |

**<u>1-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:** நாடன் இந்த ஒரு வழக்கிற்காக மட்டும் தான் பொது அதிகாரப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால், இல்லை மூன்று வழக்கிற்கு தாக்கல் செய்துள்ளேன். என்ன என்ன வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், பாகப்பிரிவினை வழக்கு, கிணற்றுக்காக போட்டுள்ள வழக்கு மற்றும் அப்பமசமுத்திரம் புல எண். 543 க்காக போடப்பட்டுள்ள வழக்கு அனைத்துக்காகவும் தாக்கல் செய்துள்ளேன். பாகப்பிரிவினை மற்றும் கிணற்றுக்காக போடப்பட்டுள்ளது என்றால், வள்ளி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. அப்பமசமுத்திர சொத்துக்காக வழக்கு யார் யார் மீது போட்டுள்ளார்கள் என்றால், செல்லம்மாள், சாந்தி மற்றும் தமிழ்ச்செல்வி ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில் வள்ளி தரப்பனிர் அல்ல என்றால், ஆமாம். இந்த வழக்கில் வள்ளி தாக்கல் செய்துள்ள பதிலுரை, கூடுதல் பதிலுரை சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால், நீதிமன்றத்திற்கு வந்த பிறகு தெரியும். கூடுதல் பதிலுரையுடன் வள்ளி தாக்கல் செய்துள்ள 10 ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

3. இந்த வழக்கு சொத்துக்ள் அனைத்தும் வள்ளிக்கு அரசாங்கத்தால் 03.06.1992

தேதியன்று வழங்கப்பட்ட டி நமுனா மூலம் பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. இந்த சொத்துக்கள் அங்கமுத்துதான் அனுபவித்து வந்தார். வள்ளி பெயரில் தான் தாவா சொத்துக்களுக்கான பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் கந்தாய ரசீதுகள் உள்ளது என்றாலும், அவற்றை அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அங்கமுத்து அரசாங்க உத்தியோகத்தில் இருந்ததால் அவர் பெயருக்கு டி நமுனா வழங்க முடியாது என்பதால் அதன் பிறகு வள்ளி மற்றும் பொன்னுசாமி பெயருக்கு வழங்கப்பட்டது.

4. நான் கூறுவது போல வள்ளி மற்றும் பொன்னுசாமி இருவரின் பெயருக்கும் டி நமுனா வழங்கப்படவில்லை என்றாலும், 03.06.1992 தேதியன்று வள்ளி கணவர் பெயர் முத்து என்பவருக்கு மட்டும் தான் டி நமுனா வழங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அந்த டி நமுனா அடிப்படையில் தான் கிராம நிர்வாக அதிகாரியும் அவரது அனுபவத்தை ஊர்ஜிதம் செய்து சான்று வழங்கியுள்ளார் என்றாலும், வள்ளி பெயரில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல.

5. வள்ளியம்மாள் அனுபவத்தில் இருப்பதால் தான் செல்லியம்பாளையம் கூட்டுறவு வங்கியில் வருடா வருடம் கடன் பெற்று வருகிறார் என்றாலும், சரியல்ல. செல்லம்மாள் வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் கடன் வழங்கக்கூடாது என செல்லம்மாள் வங்கிக்கு அறிவிப்பு அனுப்பியும் தவறான முறையில் சட்டத்திற்கு புறம்பாக வங்கி வள்ளிக்கு கடன் வழங்கியுள்ளது. நான் கூறுவது அனைத்தும் தவறு என்றாலும், வங்கி நீண்ட கால அனுபவத்தையும் கருத்தில் கொண்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் சரியான முறையில் தான் வள்ளிக்கு வங்கி கடன் வழங்கியுள்ளது என்றால், நாங்கள் அறிவிப்பு வழங்கியும் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பது தெரிந்தும் வள்ளிக்கு கடன் வழங்கியது தவறு.

6. வங்கி மீது இதுவரையிலும் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம். வங்கிக்கு உண்மையாலுமே அறிவிப்பு நாங்கள் அனுப்பவில்லை என்பதால் தான் அது தொடர்பாக வங்கி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல. எனது மனைவிக்கு வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் உடல்நிலை சரியில்லாமல் போனதால் நான் பொது அதிகார முகவர் என்ற முறையில் வழக்கில் ஆஜராகி, கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து அதனுடன் 09.12.2021 தேதியிட்ட

பஞ்சாயத்து உறுதி மொழி ஆவணம் என்பதையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஆமாம். அந்த ஆவணத்தில் பொன்னுசாதியும் அங்கமுத்து மனைவி செல்லம்மாள் இருவர் மட்டும் தான் தரப்பினர் என்றால், ஆமாம்

7. செல்லம்மாள் வழக்கு நடத்திக் கொண்டிருக்கும் வரையிலும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், நான் அவரது பொது அதிகார முகவராக வந்த பிறகுதான் மேற்படி ஆவணத்தை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. 09.12.2021 தேதியன்று பஞ்சாயத்தார் முன்னிலையில் பைசல் பேசி செல்லம்மாள் மற்றும் பொன்னுசாமி இருவரும் மூன்றில் ஒரு பங்கு சொத்து எடுத்துக் கொள்ளலாம் என்று சமரசம் பேசி ஆவணம் எழுதி அதில் நானும் ஒரு சாட்சியாகவும், பாட்டப்பன் மகன் பொன்னையன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

8. என் மனைவி எனக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகாரப்பத்திரத்தின் தேதி என்ன என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. பொது அதிகாரப்பத்திரத்தை 09.02.2021 தேதியன்றுதான் எழுதியுள்ளோம் என்றால், ஆமாம். அந்த பஞ்சாயத்து உறுதிமொழி ஆவணம் 09.12.2021 தேதியன்று தான் எற்படுத்தப்பட்டது என்றால், ஆமாம். நான் என் மனைவியிடம் பொது அதிகார ஆவணம் எழுதி வாங்கிய பிறகு 10 மாதம் கழித்து பஞ்சாயத்து உறுதி மொழி ஆவணத்தை நானாகவே ஏற்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

9. வள்ளியம்மாளுக்கு டி நமுனா மூலம் பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்துதான் பஞ்சாயத்து உறுதி மொழி ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால், சரியல்ல. 2-1/2 ஏக்கர் நஞ்சை, 5 ஏக்கர் புஞ்சைக்காகத்தான் அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. 03.06.1992 வள்ளிக்கு அரசாங்கத்தால் வழங்கிய சொத்துக்களையும் சேர்த்து வள்ளியை தரப்பினாக சேர்க்காமல் வழக்கிற்கு பின்னிட்டு நானாக ஏற்படுத்தியுள்ள ஆவணம் தான் என்றால், சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால் அந்த ஆவணமே செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

10. வள்ளிக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சொத்து என்பதால் இதில் உரிமை கோர எங்களுக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால், பொய்யான பத்திரத்தை ஏற்படுத்தி வள்ளி வாங்கிவிட்டு அரசாங்கம் கொடுத்ததாக கூறுகிறார், அந்த சொத்து அரசாங்கத்தால்

அங்கமுத்துவுக்கு வழங்கப்பட்ட சொத்து. போலியான பத்திரம் குறித்து போலியாக பட்டா வாங்கியுள்ளதால் நான் இதுவரையிலும் வள்ளி மீது நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், சரியல்ல. வழக்கிற்காக வேண்டி நான் பொய்யான காரணங்களை கூறி வருகிறேன் என்றாலும், வழக்கு தாக்கல் செய்யவே எந்தவித முகாந்திரமும் இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால், சரியல்ல.

1-ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

2-ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின் பேரில் வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 11.144 A.M

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**